
# பெண்ணியத்தின் புதிய போக்குகள்




பதிப்பாசிரியர்

முனைவர். த. விஜயலட்சுமி

முனைவர். ஹெப்சி ரோஸ்மேரி. அ



தமிழ்த்துறை

கேரளப் பல்கலைக்கழகம்

திருவனந்தபுரம்

**Penniyaththin Puthiya Pokkukal**
First Edition : January 2017
By
Dr.T.Vijayalakshmi©
Myth : 31
ISBN : **978-93-81322-37-6**

Layout : Athmira.
wrapper: Kavin Muruku.

Pages : 418
Price : 500/-

Printed & Published by
*myth Creations*
C-63,Fist Floor ,Fist main Road, Anna Nagar East
Chennai-600102. Ph : +919600131346
poovarashimedia@gmail.com,

## உள்ளே...

கட்டுரைத் தலைப்புகள் இல


1. முனைவர். விஜயலட்சுமி.த - பெண் என்னும் கட்டமைப்பு 13
2. எழுத்தாளர் ஷாமிலா ஷெரீப் - ஊடகமும் பெண்களும் - இலங்கை ஊடகங்களில் முஸ்லிம்பெண்களின் பங்களிப்பு. எதிர்கொள்ளும் சவால்களும் நிலையாமையும். 17
3. முனைவர். கு. நா. முருகவேல் - பெண்ணியம் உலகளாவிய கோட்பாடுகளும் நிலைப்பாடுகளும். 25
4. முனைவர். ஹெப்சி ரோஸ் மேரி .அ - விளம்பரங்களில் பெண் சித்தரிப்பு 33
5. முனைவர்.பா.இரவிக்குமார்-வண்ணத்துகள்களின் உரையாடல். 35
6. முனைவர் இரவிச்சந்திரன் இ.ஆர் - சட்டங்களின் பார்வையில் பெண்ணியம் 40
7. முனைவர் .ஆர். இளவரசி - பெண்ணிய நோக்கில் திருவிளையாடற் புராணம் 45
8. கிறிஸ்டோபர் ஜாண் - சங்க இலக்கியத்தில் பெண்ணும் பெண் நிலைவாதமும் 49
9. முனைவர்.பொ. ரமேஷ். புறநானூறு பேசும் பெண்மையின் பெருமை 55
10. எழுத்தாளர் H. ஜெசீமா- இலங்கை அரசியலில் பெண்களின் வகிபாகம் 60
11. முனைவர் க. லதா - புதுமைப் பெண்மை 67
12. அருள்மொழி. கு- தமிழ் இலக்கியங்களில் அன்று முதல் இன்று வரை பெண்ணியம் 72
13. காஞ்சனா.ச- காலந்தோறும் மகளிர் மாண்புகள் 76
14. ப. மதனவாசன், பிரதம ஆசிரியர், தமிழ்மிரர் - இலங்கை ஊடகவியலும் பெண்களின் பங்கும் 81
15. முனைவர் கிருத்திகா - பாரதியின் பாஞ்சாலி ஒரு பெண்ணியப் பார்வை 90
16. ஹேமலதா .ரெ - கண்ணதாசனின் பாடல்களில் பெண்ணியச் சிந்தனைகள் 95
17. சீனிவாசன்.பு- தமிழ்ப் புதுக்கவிதைகளில் பெண்ணியம் 99
18. சுஜி எஸ்தர் ராணி-கோவை கோகுலனின் விடியல் சிறுகதைத் தொகுப்பில் பெண் சித்தரிப்பும்-சமுதாயப் போக்கும் 107
19. முனைவர்.சு.செல்வகுமாரன் - .வானம் பூனைக்குட்டியாகி கடலை நக்குகின்றது... அனரின் கவிதை உலகம். 115
20. முனைவர். செல்வலதா.ர - பெண்களின் வாழ்க்கைச் சூழல் பெண்ணியச் சிந்தனையின் வெளிப்பாடு 123
21. சென்னப்பன். மு- தொல்காப்பியர் காட்டும் பெண்கள் நிலை 128
22. சோமசேகர்.ச -கவிஞர் நிர்மலா சுரேஷின் கவிதைகளில் அரசியல் கூறுகள் 132

# புதுமைப் பெண்மை

முனைவர் க. லதா,
இணைப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி, மதுரை.

மாதவம் செய்தால் மட்டுமே பெண்ணாய்ப் பிறக்கமுடியும் பெண்மை வாழ்கென்று கூத்திடுவோம் என்ற இக்கூற்றுகள் பெண்ணாய்ப் பிறந்து வாழ்ந்தோரின் கூற்றுகளில்லை. கவிமணி, பாரதி எனும் இரு ஆடவர் கூற்றுக்கள். இவ்வுலகில் நடக்கின்ற அனைத்து நற்செயல்களுக்கும் ஊற்றுக்கண்ணாய் இருப்பவள் பெண் என்றும், அவளாலே காரியங்கள் கைகூடும் என்றும் அனுபவித்து உணர்ந்து பாடிய பாடல்கள். தெய்வம் என்றும் உயிர்களின் தோற்றத்துக்குக் காரணமாய் இருப்பவள் என்றும் பல நிலைகளில் பெண்ணின் மேன்மை கூறப்பட்டு வந்தாலும், சமூகத்தில் அவள் நிலை பல சமயங்களில் இரக்கத்திற்குரியதாக இருக்கிறது. மொழி, இனம், நாடு, கண்டம் என இவற்றுள் அவள் எதனைச் சார்ந்திருப்பினும் சமூகத்தில் சார்புநிலைக்குத் தள்ளப்படுகிறாள். "ஆண் மேலாதிக்கத்தால் வழிவழியாய் வந்த பண்பாட்டின் அடிப்படையில் பெண்கள் தனித்துவம் பெறாமல் வாழ்ந்து கொண்டிருப்பதும் ஆண்களின் பாலியல் தேவைக்கும் ஆண்களைச் சார்ந்து, அவர்களின் நலன் பேணுவதையும் வாழ்வாகக் கொண்டுள்ள நிலை" என்பதே பெண்ணின் நிலை என இரா. பிரேமா கூறுகிறார். இந்நிலை மாறும் சாத்தியமுள்ளதா? என்பதைப் பெண் எழுத்தாளர் சிறுகதைகளின் வழி இக்கட்டுரை ஆய்கிறது.

தமிழகத்திலும், பிறநாடுகளிலும் வாழும் பெண்கள், குடும்பம் மற்றும் சமூகச்சூழலில் எதிர் கொள்ளும் சிக்கல்கள், அவர்களுடைய சிந்தனை வளம் மற்றும் படைப்புத்திறன் மேம்பாடு போன்றவற்றை நோக்கங்களாகக் கொண்டு நடத்தப்படும் பெண் எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியில் தேர்வாகி, வெளிவந்த சிறுகதைகளின் தொகுப்பு கனாக்காலம். பெண்களின் அனுபவங்கள் மட்டுமே இங்கு கதைப் பொருளாகின்றன. இச் சிறுகதைகள் பெண்ணின் நிலைப்பாட்டைச் சித்திரிப்பதுடன் அவளுக்கு ஏற்படக்கூடிய சிக்கல்கள், எதிர்கொள்ளும் சவால்கள், அவற்றுக்குத் தீர்வு காணும் விதம் எனப் பலவற்றையும் பதிவு செய்துள்ளன.